சார்பு நீதிமன்றம், முதுகுளத்தூர்,

அ.வ.எண்.36/2021

2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20ம் நாள் பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1944ம்9 ஆண்டின்உறுதிமொழி சட்டத்தின்படி திரு.த.ராஜகுமார், எம்,,ஏ, பி.எல்., சார்பு நீதிபதியாகிய என்னால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

பெயர் : **திரு. முத்துக்குமார்**

**20.11.2023**

பி.வா.சா. **:1**

**5,6 பிரதிவாதிகள் தரப்பில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக கட்சி செய்து வருவதாக சொல்லப்பட்டதாலும், மேற்படி 5,6 பிரதிவாதிகளும், 1 முதல் 4 பிரதிவாதிகளும் ஒத்த தற்காப்பை எடுக்கவில்லை என கூறப்படவில்லை என்பதாலும் 5,6 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு 5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

**இந்த வழக்கில் வாதி யார் என்றால் என் அம்மா. இந்த வழக்கில் எங்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல்செய்ய எங்கள் வழக்கறிஞருக்கு தகவல் சொன்னது நான்தான் என்றால் ஆமாம். இவ்வழக்கில் 5,6 பிரதிவாதிகள் தரப்பில் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 5,6 பிரதிவாதிகள் என்னுடைய அப்பா தங்கம் நாயக்கரின் உடன் பிறந்த சகோதரரான பொன்னுச்சாமி நாயக்கரின் வாரிசுகள் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்களில் என்ன விவசாயம் உள்ளது என்றால் நெல் மற்றும் பருத்தி போட்டுள்ளோம். நெல் விவசாயத்திற்கு பயிர் காப்பீடு உண்டு என்றால் சரிதான். மேற்படி காப்பீடு செய்யப்படவேண்டுமென்றால் யார் அனுபவம் செய்கிறார்களோ அவர்களால்தான் காப்பீடு செய்ய முடியும் என்றால் சரிதான். 16ம் லக்க சொத்திற்கு பொன்னுச்சாமி நாயக்கர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் 16ம் லக்க சொத்தில் பாதி சொத்துக்கு என் அப்பா பெயரிலும் மற்ற பாதி சொத்துக்கு மேற்படி பொன்னுச்சாமி நாயக்கரின் பெயரில் தவறுதலாக மாறியுள்ளது என்று நான் சொல்கிறேன். அவ்வாறு பட்டா மாறி 40 வருடங்கள் இருக்கும் என்றால் தெரியாது. மேற்படி பட்டாவானது நிலஉடைமை மேம்பாட்டுத்திட்டத்தின் படி மாறியது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி பட்டா பொன்னுச்சாமி நாயக்கர் பெயரில் உள்ளது எத்தனை ஆண்டுகள் தெரியும் என்றால் 10,15 வருடங்களுக்கு முன்பு தெரியும். மேற்படி பட்டாவை ரத்து செய்ய நானோ, என் தாயாரோ நடவடிக்கை**

எடுக்கவில்லை என்றால் சரிதான். இன்றைய தேதி வரையில் மேற்படி 16 ம் லக்க சொத்தை பொன்னுச்சாமி நாயக்கர் வாரிசுகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவம்செய்து வருகிறேன். பட்டா அவர்களது பெயரில் உள்ளதால் அவர்கள் பயிர்க்காப்பீடு பெற்று வருகிறார்கள். அனுபவம் செய்பவர்களுக்குத்தான் வருவாய்த்துறையினர் அடங்கல் எழுதுவார்கள் என்றால் அனுபவம் செய்யாதவர்களுக்கும் அடங்கல் கொடுக்கிறார்கள், அனுபவம் செய்பவர்களுக்கும் அடங்கல் கொடுக்கிறார்கள். மேற்படி அடங்கல் கேட்டு வருவாய்த்துறையில் மனு கொடுத்தேனா என்றால் நாங்கள் இருக்கும் வரை அடங்கல் செய்கிறோம் என்பதால் மனு கொடுக்கவில்லை. 16 ம் லக்க சொத்து பாதி பூர்வீகமாகவும், பாதி கிரயமாகவும் வந்த சொத்தாகும். மேற்படி கிரய ஆவணம் எந்த வருடம் ஏற்பட்டது என்று தெரியாது. மேற்படி கிரய ஆவணத்தின் சரத்துக்கள் பற்றி தெரியாது. மேற்படி 1973 ம் ஆண்டு கிரய ஆவணத்தில் 16 ம் லக்க சொத்து பொன்னுச்சாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா 16 ம் லக்க சொத்து 5,6 பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றும் நான் அனுபவம்செய்யவில்லை என்றால் சரியல்ல.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

தாவா 16 ம் லக்க சொத்து வா.சா.ஆ.4 (26.07.1973) தேதியிட்ட ஆவணம் மூலம் தங்கம் நாயக்கர் தனித்து வாங்கிய சொத்து என்றால் சரிதான். தாவா 16 ம் லக்க சொத்தில் 5,6 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான். 5,6 பிரதிவாதிகள் பெயரில் மேற்படி சொத்துக்கு பட்டா தவறாக ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்தம் 17 லக்க சொத்துக்களுக்கு இவ்வழக்கு நடைபெறுகிறது. தாவா 2,3,6,12 முதல் 17 லக்கச் சொத்துக்கள் எனது தகப்பனார் தங்கம் நாயக்கர் தனித்து கிரயம் வாங்கிய சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. 2,3,6,12 முதல் 17 லக்கச் சொத்துக்கள் என் அப்பாவிற்கு எப்படி பாத்தியமானது என நான் கூறுகிறேன் என்றால் பாதி சொத்துக்கள் பூர்விகமாகவும், பாதி சொத்துக்கள் கிரயமாகவும் கிடைக்கப்பெற்ற சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்களில் எவைகள் என் அப்பாவிற்கு கிரயபாத்தியமானது, எவைகள் பூர்வீக பாத்தியமானது என்று சொத்துக்களின் விபரம் குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியுமா என்றால் பட்டா எண்களை குறிப்பிட்டு

என்னால் சொல்ல முடியும். கிரயப்பத்திரங்களின் அசல் என்னிடம் கைவசம் உள்ளதா என்றால் அசல் பத்திரங்கள் இல்லை. ஆனால் 1952 ம் வருடத்திய என் தாத்தா முத்துநாயக்கர் கிரயம்பெற்ற சொத்துக்கான அசல் கிரயப்பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேலேசொன்ன சொத்துக்களை தவிர இதர சொத்துக்கள் மட்டுமே தங்கநாயக்கருக்கு அவரது தகப்பனார் மூலம் பூர்வீக பாகப்பாத்தியத்தின் அடிப்படையில் கிடைத்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனக்கு தற்போது என்ன வயதாகிறது என்றால் 50 வயதாகிறது. நான் பிறப்பதற்கு முன்பே முத்துநாயக்கர் இறந்துவிட்டார். மேற்படி முத்துநாயக்கர் 1954 ம் ஆண்டு இறந்தார் என்றால் தெரியாது. மேற்படியாரின் பெண் வாரிசுகள் முறையே வீரம்மாள், நாகம்மாள், தங்கபத்து ஆவார்கள். முத்துநாயக்கர் 1954 ம் ஆண்டு இறந்துவிட்டதால் அவரது பெண் வாரிசுகளுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. முத்துநாயக்கரின் வாரிசுகள் எந்தெந்த வருடம் இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வீரம்மாள் 2002 லும், நாகம்மாள் 1999 லும் இறந்து விட்டார்கள் என்றால் இறந்துவிட்டார்கள். ஆனால் வருடம் தெரியாது. முத்துநாயக்கரின் மக்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். நானும், எனது சகோதரரும் வாதிகளாக இருந்து இந்த வாதிகளை பிரதிவாதிகளாக வைத்து முதுகுளத்தூர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.34/2019 என்ற வழக்கை சர்வே எண்கள்.181/17 ஏ, 201/1 ஏ 2 சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி வழக்கின் பிராதை தாக்கல் செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லையா என்றால் இல்லை. அந்த பிராது நகல் என்னிடம் காண்பிக்கப்படுவதுதானா என்றால் ஆமாம். அந்த பிராது நகல் வா.சா.ஆ.9. நான் 3 ம் வகுப்பு படித்துள்ளேன். மேற்படி பிராதில் முத்துநாயக்கரின் வாரிசுகளுக்கிடையில் பாகம் பிரிக்கப்படவில்லை என கூறப்படவில்லை என்றால் அந்த வழக்கில் கண்ட 2 சொத்துக்களைப் பொறுத்து பாகம் பிரிக்கப்பட்டதாக கூறப்படவில்லை. மேற்படி வழக்கில் தங்கம் நாயக்கருக்கு மேற்படி வழக்கில் கண்ட சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்கள் என்றுதான் சொல்லியுள்ளேன் என்றால் 1 சொத்து பூர்வீகச் சொத்து என்றும், ஒரு சொத்து கிரயச் சொத்து என்றும் சொல்லியுள்ளேன். முத்துநாயக்கரின் பெண் வாரிசுகள் அனைவருக்கும் 1989 ம் ஆண்டிற்கு முன்பே திருமணம்

நடைபெற்றுவிட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்குச் சொத்துக்கள் தங்கம் நாயக்கருக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும் முத்துநாயக்கரின் வாரிசுகளுக்கிடையே பாகம் பிரிக்கப்படவில்லை என்று பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.